### தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை சார்பில்

# சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு - பன்னாட்டுக் கருத்தரங்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜன.5-

தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை சார்பில் சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுப் பிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கு இன்று (05.01.2025) முதல் 07.01.2025 வரை மூன்று நாட்கள் சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சிய கக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இன்று (05.01.2025) காலை 10.00 மணியள வில் தொடங்கி வைக்கப்படவுள்ளது. மேலும், சிந்துவெளிப் பண்பாட்டுக் கண் டுபிடிப்பினை உலகுக்கு அறிவித்த மேனாள் இந்தியத் தொல்லியல் துறை யின் தலைமை இயக்குநர் சர் ஜான் ஹீபர்ட் மார்ஷல் அவர்களின் திருவுருச்சி லைக்கு அடிக்கல் நாட்டியும், சிந்துவெளி வரிவடிவங்களும் தமிழ்நாட்டுக் குறியீடு களும்; ஒரு வடிவவியல் ஆய்வு என்ற நூலினை வெளியிட்டும் விழாப் பேருரை யாற்றவுள்ளார்கள்.

சிந்துவெளி நாகரிகம் முதன்முதலில் 1924ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் நாளன்று உலகுக்கு அறிவிக்கப்பட்டது. அதனை 'தி இல்லஸ்ட்ரேட்டட் லண்டன் நியூஸ்' (The Illustrated London News) என்ற இதழில் சர் ஜான் மார்ஷல் அறிவித் தார். இந்த அறிவிப்பு இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றில் ஒரு திருப்பு மு னையினை உண்டாக்கியது. நூறு ஆண் டுகளுக்கு முன்பு உலகுக்கு அறிவிக்கப் பட்ட சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நமது கடந்த கால வரலாற் றைப் பற்றிய புரிதலை மாற்றியது. இந்தக் கண்டுபிடிப்பின் நூற்றாண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும், ரோஜா முத் தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிந்து ஆய்வு மையமும் இணைந்து, மூன்று நாட்கள் பன்னாட்டுக் கருத்தரங்கை ஒருங் கிணைத்து நடத்துகின்றன.

**சிந்துவெளி நாகரிகத்தின் புரிதலை உண்டாக்க முடியும்!**

சிந்துவெளி குறித்து ஐராவதம் மகாதே வன், அஸ்கோ பர்போலா, மார்க் கெனோ யர், கிரிகோரி போசெல், ஆர். பாலகிருஷ் ணன் உள்ளிட்ட பல அறிஞர்கள் ஆராய்ந்து, நமது புரிதலை வலுப்படுத்தி வந்துள்ளனர்.

கடந்த 100 ஆண்டுகளில் இந்தியாவி லும் பாகிஸ்தானிலும் எண்ணற்ற சிந்து வெளி நாகரிகம் தொடர்பான இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனை யொட்டி சிந்துவெளி சார்ந்த புரிதலை ஆழ மாக்க வேண்டியது அறிவுலகின் கடமை. சர் ஜான் மார்ஷல் குறித்தும் அவரது பங் களிப்புகள் குறித்தும் ஆய்வுகள் அதிகம் வெளிவராத நிலையில் அதனை ஆய்தல், சிந்துவெளி எழுத்துகளைப் பற்றியும் அதன் விளக்கங்கள் சார்ந்தும் பல ஆராய்ச்சிகள் செய்தல், பண்டைய மர பார்ந்த அடையாளங்களைக் கொண்டு தனித்துவமான கருத்தாக்கங்களை உண் டாக்குதல், சிந்துவெளியைப் புரிந்துகொ ள்வதற்கான நவீனத் தொழில்நுட்பக் கரு விகளைப் பயன்படுத்தல், மரபணு ஆய்வு களைப் பயன்படுத்துதல், சிந்துவெளியின் பொருள்சார் பண்பாட்டை ஆராய்தல் முத லியவற்றின்மூலம் சிந்துவெளி நாகரிகம் குறித்து இன்னும் தெளிவான புரிதலை உண்டாக்க முடியும். மறுபுறம் தமிழ்நாட் டில் நடைபெற்று வரும் தொல்லியல் ஆய் வுகளில் கிடைக்கப்பெறும் பானை ஓடுக ளில் உள்ள கீறல்கள் சிந்துவெளி வரிவடி வங்களோடு ஒப்பீட்டு அளவில் ஒன்றாக இருக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டும் இந்தக் கருத்தரங்கம் ஒருங்கி ணைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு கண்ணோட்டங்களை ஒன் றிணைப்பதன் மூலமும், பல்துறைசார்ந்த உரையாடலை வளர்ப்பதன் மூலமும், சிந்துவெளி நாகரிகம் பற்றிய நமது புரித லையும், சமகாலச் சமூகத்தில் காணப்ப டும் அதன் நீண்ட தொடர்பையும் தெளி வாக்குவதே இந்தக் கருத்தரங்கின் மைய நோக்கமாகும். மேலும், இந்தப் பன்னாட் டுக் கருத்தரங்கு அறிஞர்கள், தொல்லிய லாளர்கள், வரலாற்றாசிரியர்கள், ஆர்வ லர்கள் முதலியோரையும் சமீபத்திய அகழாய்வுகள், தொழில்நுட்ப முன்னேற் றங்கள் உள்ளிட்டவற்றையும் ஒருங்கி ணைத்து, சிந்துவெளிப் பண்பாட்டைப் புரிந்துகொள்வதில் உள்ள சிக்கல்களைத் தீர்த்துக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கு இக்கருத்தரங்கம் வழிவகை செய்கிறது.

**பல்வேறு தலைப்புகளில் கருத்துரைகள்!**

இக்கருத்தரங்கில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Dr. கிரெக் ஜேமிசன் அவர்கள் சிந் துப் பண்பாட்டின் முத்திரைகள்; நடப்பு பார் வைகள் மற்றும் எதிர்கால இலக்குகள் என்ற தலைப்பிலும் வரலாற்று எழுத்தா ளர் டோனி ஜோசப் அவர்கள் ஹரப்பா நாக ரிகம் கண்டுபிடிப்பு; நூறு ஆண்டுகளுக் குப் பிறகும் நிலவும் சில கேள்விகளும் சிக்கல்களும் என்ற தலைப்பிலும், அசோகா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேரா. நயன்ஜோத் லஹிரி அவர்கள் சிந்து வெளி நாகரிகம்; ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டுபிடிப்பினைத் திரும்பிப்பா ர்த்தல் என்ற தலைப்பிலும் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையின் மதிப்புறு ஆலோசகர் பேரா. ராஜன் அவர் கள் சிந்துவெளி வரிவடிவங்களும் தமிழ் நாட்டுக் குறியீடுகளும்; ஓர் ஒப்பீட்டு ஆய்வு என்ற தலைப்பிலும், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிந்துவெளி ஆராய்ச்சி மைய ஆலோசகர் ஆர்.பாலகிருஷ்ணன் அவர்கள் சிந்துவெளிப் புதிர்களைப் புரிந்து கொள்ளுதல்: இருமொழி எழுத்துகள் இல் லாத நிலையில் என்ற தலைப்பிலும், ஹரப்பா.காம் நிறுவனர் திரு. ஓமர் கான் அவர்கள் ஹரப்பா.காம்@30 என்ற தலைப் பிலும், ஐக்கிய இராச்சியம் (UK), டர்காம் பல் கலைக்கழகத் தொல்லியல் ஆய்வறிஞர் முனைவர் கிறிஸ்டோபர் டேவிஸ் அவர்கள் மார்ஷல் மீதான புத்தொளி: சர் ஜான் மார்ஷல் அவர்களின் தொல்லியல் அணுகுமுறை களை ஆராய்தல் என்ற தலைப்பிலும் கருத் துரைகள் வழங்கவுள்ளனர்.

மேலும், மூன்று நாட்கள் தொடர்ந்து நடை பெறும் இக்கருத்தரங்கில் வெளிநாடுகள் மற் றும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த 24 ஆய் வாளர்கள் – தொல்லியலாளர்கள் சிந்துவெளி நாகரிகம் மற்றும் இந்தியத் துணைக் கண்டத் தின் இதர நாகரிகங்கள், பண்பாடுகள் குறித் துப் பல்வேறு தலைப்புகளில் தங்களது ஆய் வுரைகளை வழங்கவுள்ளனர். மூன்று நாட்கள் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் பொதுமக்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள் பயன்பெறும் வகையில் நேரலையில் ஒளிப்பரப்பப்பட உள்ளன.



தஞ்சாவூர் மாவட்ட அளவிலான அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டிகள் 2024 2025 உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் அவர்கள் நேற்று (04.01.2025) தொடங்கி வைத்தார். தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன் , தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் , மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் , மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஒன்றரை ஆண்டாகப் பற்றி எரியும்

# மணிப்பூருக்கு பிரதமர் செல்லாதது ஏன்?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை, ஜன. 5 -

பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் மணிப்பூரில் ஒன்றரை ஆண் டுகளுக்கும் மேலாக வன் முறை சம்பவங்கள் பற்றி எரி யும் நிலையில், பிரதமர் மோடி அங்கு செல்லாதது ஏன் என்று தி.மு.க. துணை பொதுச்செய லாளர் கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.



சென்னை ராஜா அண்ணா மலைபுரத்தில் உள்ள முத்த மிழ் பேரவை அரங்கில் சென்னை தென்மேற்கு தி.மு.க. சார்பில் மகளிரணி, மகளிர் தொண்டரணி சார்பில் இளம் பெண்கள் பாசறைக் கூட் டம் நடைபெற்றது. இந்தக் கூட் டத்தில் தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் உரை யாற்றிய அவர், பெண்கள் முன்னேற்றத்துக்கு ஏராள மான திட்டங்கள் நிறை வேற் றப்படுவதுதான் திராவிட மாடல் அரசின் சாதனை என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி கருணாநிதி, அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் காவல் துறை துரிதமாக செயல்பட்டு நடவடிக்கை மேற்கொண்ட தால்தான், குற்றவாளி உடனடி யாக கைது செய்யப்பட்டுள்ள தாக கூறினார். அண்ணா பல் கலைக்கழக மாணவி வழக்கை எதிர்க்கட்சியினர் அரசியலாக்குவதாகவும் குற் றம் சாட்டினார். பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் மணிப்பூரில் ஒன் றரை ஆண்டுகளுக்கும் மேலாக வன்முறை சம்பவங் கள் பற்றி எரியும் நிலையில், பிரதமர் மோடி மணிப்பூருக்குச் செல்லாதது ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

### ஒன்றிய அரசு

# கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும்!

## ராகுல்காந்தி வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜன. 5 -

கல்வித்துறைக்கு ஒன்றிய அரசு அதிக நிதி ஒதுக்கவேண்டும் என, மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தி யுள்ளார்.



மக்களவை எதிர்க் கட்சித்தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், "நாட்டு மக்களுக்கு தரமான கல்விக்கு உத்தரவாதம் அளிப் பது என்பது ஒவ்வொரு அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும்" என்று கூறியுள்ளார்.

தனியார் மயமாக்கு தல் மற்றும் நிதியுதவி அளிப்பது மூலம் இந்த இலக்கை ஒருபோதும் அடைய முடியாது என்றும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

கல்வித் துறைக்கு ஒன்றிய அரசு முக்கியத் துவம் அளித்து அதிக மான நிதியை ஒதுக்க வேண்டும் என்றும் மக் களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி

# அர்ச்சகர்கள் - பணியாளர்களின் நலன் காக்கும் அரசாக திராவிட மாடல் அரசு திகழ்கிறது!

## முதுநிலைத் திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் கூட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

*சென்னை, ஜன.05*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் நேற்று (04.01.2025) ஆணையர் அலு வலகத்தில், 48 முதுநிலைத் திருக்கோயில்களின் அர்ச்சகர் கள் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத் தில் அர்ச்சகர்கள் தங்களது திருக்கோயில்களின் மேம் பாட்டிற்கு தேவையான கூடு தல் வசதிகள் அர்ச்சகர்கள் மற் றும் பணியாளர்களின் நலன் சார்ந்த கருத்துகளை தெரிவித் தனர்.

இக்கூட்டத்தில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக கட்டுப்பாட்டி லுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு குடமுழுக்கு நடை பெற்று வருவதோடு, திருக் கோயில் சொத்துகளை மீட்டெடுத்து பாதுகாக்கும் பணிகளும் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. மேலும், அர்ச்சகர்கள் மற்றும் பணியா ளர்களின் நலன் காக்கும் வகையில் பல்வேறு புதிய திட் டங்கள் செயல்படுத்தப்பட் டுள்ளன. கொரோனா காலத் தில் அர்ச்சகர்களுக்கு உதவி த்தொகை ரூ.4000/ (அரிசி மற்றும் மளிகைப்பொருட்கள் உட்பட) வழங்கப்பட்ட தோடு, திருக்கோயி ல்களில் அன்னைத் தமிழில் வழிபாடு செய்யும் அர்ச்சகர்களுக்கு அர்ச்சனை கட்டணத்தில் 60 சதவீதம் பங்கு தொகையாக 2024 டிசம்பர் மாதம் வரை ரூ.79.94 இலட்சம் பங்குத் தொகையாக வழங்கப்பட் டுள்ளது.

தமிழர் திருநாளாம் பொங் கல் திருநாளை முன்னிட்டு ஆண்டுதோறும் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு புத்தாடைகளும், சீருடைக ளும் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு கால பூஜைத் திட்டத்தின் கீழ் உள்ள 17,000 திருக்கோ யில்களின் அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ உத வித் தொகையாக வழங்கப்ப டுவதோடு, அவர்களது குழந் தைகளின் மேற்படிப்பிற்கு கல்வி உதவித்தொகையாக ரூ.10,000/ வீதம் 900 மாண வர்களுக்கு வழங்கப்பட்டுள் ளது. 5 ஆண்டுகளுக்கு மேல் திருக்கோயில்களில் தற்காலிக மாக பணிபுரிந்து வரும் 229 அர்ச்சகர்கள் உட்பட 1,317 திருக்கோயில் பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட் டுள்ளனர்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின், 708 அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் பணி நியம னம் செய்யப்பட்டுள்ளனர். அர்ச்சகர்கள் உள்ளிட்ட அனைத்து திருக்கோயில் பணி யாளர்களுக்கும் ஆண்டிற்கு ஒருமுறை முழு உடற்பரிசோ தனை திட்டம் செயல்படுத் தப்பட்டு இதுவரை 16 இணை ஆணையர் மண்டலங் களில் 12,129 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். ரூ.136.66 கோடி மதிப்பீட்டில் 500 வீடுகள் கட்டப்பட்டு வரு கின்றன.

ஓய்வூதியம், குடும்ப ஓய்வூ தியம், பொங்கல் கருணைத் தொகை உயர்த்தி வழங்கப் பட்டுள்ளது. இப்படி எண் ணற்ற திட்டங்களை முதல மைச்சர் அவர்கள் தலைமையி லான அரசு நிறைவேற்றி உங் களின் நலன் காத்து வருகிறது.

இன்றைய தினம் நீங்கள் தெரிவித்துள்ள கருத்துகள் மற் றும் கோரிக்கைகள் அனைத் தும் துறையால் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு சட்டவிதிமு றைகளுக்குட்பட்டு நிறை வேற்றி தர உரிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடு தல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந.திரு மகள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண் டனர்.

### பா.ஜ.க.வின் சுயநலத்தால் மணிப்பூர் மாநிலம் பற்றி எரிகிறது!

# அரசியலமைப்புக் குற்றத்திலிருந்து தப்ப முடியாது!

## பிரதமர் மோடிக்கு கார்கே எச்சரிக்கை!

புதுடெல்லி, ஜன. 5 -

ஒன்றரை ஆண்டுகளாக பற்றி எரியும் மணிப்பூ ருக்குச் செல்லாத பிரதமர் மோடி, அரசியலமைப்பு குற்றத்திலிருந்து ஒருபோ தும் தப்பிக்க முடியாது என, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடுமையாக சாடியுள்ளார்.

பா.ஜ.க. ஆட்சி நடை பெறும் மணிப்பூரில் மீண் டும் வன்முறை அரங்கேறி யுள்ளது. காங்போக்பி மாவட்டத்தில் காவல் கண்காணிப்பாளர் அலுவ லகம் மீது தாக்குதல் நடத் தப்பட்ட சம்பவத்தால்



அங்கு பதற்றம் நிலவி வரு கிறது.

இதுதொடர்பாக பிரத மர் மோடிக்கு அடுக்கடுக் கான கேள்விகளை எழுப்பி காங்கிரஸ் தலை வர் கார்கே சமூக வலை தளப்பதிவில் விளக்கமாக பதிவிட்டுள்ளார்.

அதில், கடந்த 2020 ஆம் ஆண்டு ஜனவரியில் பா.ஜ.க.வுக்கு தேர்தல் பிரச்சாரத்துக்காக மணிப் பூருக்கு பிரதமர் மோடி கடைசியாக சென்றதை கார்கே குறிப்பிட்டுள் ளார்.

ஆனால், அதன் பிறகு 2023 ஆம் ஆண்டு மே மாதம் 3-ஆம் தேதி மணிப் பூரில் அரங்கேறிய வன் முறை சம்பவங்கள் 600 நாட்களுக்கு மேலாகி விட் டது. பல்வேறு கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளதை செயற்கைகோள் படங்கள் தெளிவாக காட்டுவதாக கார்கே கூறியுள்ளார்.

250க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிரி ழப்பு, 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அகதி களாக இடம் பெயர்ந் துள்ள நிலையில், பா.ஜ.க. வின் சுயநலத்தால் மணிப் பூர் மாநிலம் இன்னும் பற்றி எரிந்து கொண்டிருப் பதாக கார்கே வேதனையு டன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா கூட்டணிக் கட்சிகள் பிரதமர் மோடிக்கு கடந்த டிசம்பர் 6 ஆம் தேதி கேட்கப்பட்ட கேள்விகளை தனது சமூக வலைதளப்பதிவில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2024 ஆம் ஆண்டு டிசம் பருக்குள் மணிப்பூருக்குச் செல்லுமாறு கூறினோம், ஆனால் நீங்கள் செல்ல வில்லை.

மணிப்பூர் விவகாரம் தொடர்பாக, டெல்லியில் அனைத்து அரசியல் கட்சி களின் பிரதிநிதிகளை அழைத்து பேசுமாறு கூறி யதையும் ஏற்கவில்லை. மணிப்பூருக்கு நேரடி யாகச் சென்று அங்குள்ள மக்களை நேரில் சந்திக்கு மாறு வலியுறுத்தியதையும் செயல்படுத்தவில்லை என்று பிரதமர் மோடியை கார்கே விமர்சித்துள்ளார்.

இவற்றில் எதையுமே செய்யாத பிரதமர் மோடி அர சியலமைப்பு குற்றத்தி லிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என்று கூறியுள்ள காங்கிரஸ் தலைவர் கார்கே, மணிப்பூரை எரிக்கும் தீக்குச்சியாகவே பா.ஜ.க. உள்ளதாகவும் காட்டமாக விமர்சித்துள்ளார்.





இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (04.01.2025) ஆணையர் அலுவலகத்தில், 48 முதுநிலைத் திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் .பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந.திருமகள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



திருவள்ளூரில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருவள்ளூர் மாவட்ட பிரிவின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு மிதிவண்டி போட்டி நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கொடியசைத்து போட்டியை துவக்கி வைத்தார் உடன் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, சசிகாந்த் செந்தில் எம்.பி., மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர், கோட்டாட்சியர் கற்பகம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் வி .சேது ராஜன், தடகள பயிற்றுநர் லாவண்யா, நகரக் கழகச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, ஒன்றிய செயலாளர். எஸ். மகாலிங்கம், நிர்வாகிகள் ஜி.விமல்வர்ஷன், டி.மோதிலால், டி.கே.பாபு, வி.ஜெ.உமா மகேஸ்வரன், டி.ஆர்.திலீபன், கு.பிரபாகரன், அயூப் அலி, வேலாயுதம், வி.எஸ்.சதீஷ், வி.தியாகராஜன், சரவணன், ஆர்.ராஜா, ஆ.பவளவண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.